# அருட்செல்வர் மாணவர் சிந்தனை மன்றம்

## நோக்கம்

பொள்ளாச்சியில் பண்பாட்டுச் சிறப்பு மிக்க ந.க.ம.கல்லூரியின் வைரவிழாவினை முன்னிட்டு பலரும் பயன்படும் வகையில் சமுதாய நற்பணிகள் செய்யும் நோக்கில் கல்லூரித் தலைவரிடம் அனுமதி பெற்று மாணவர்களால் தன்னெழுச்சியாகத் துவங்கப்பட்ட மாணவர் சிந்தனை மன்றம் பொள்ளாச்சியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய கல்லூரி நிறுவனர் டாக்டர் அருட்செல்வர் அவர்களின் பெயரில் கல்லூரி முதல்வர் அவர்களின் முன்னிலையில் 23.10.2017 அன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டு தற்போது அனைத்துத் துறை மாணவர்களையும் ஒருங்கிணைத்து துறைசாராத கல்லூரி அளவிலான அமைப்பாக ஓராண்டைக் கடந்து செயல்பட்டுவருகிறது.

**"எல்லாஉ யிர்களும் இன்புற்றுவாழவேண்டும்"**என்னும் வள்ளலாரின் தாரக மந்திரத்தினை மனதில் கொண்டு இயங்கும் இயக்கமாக **அருட்செல்வர் மாணவர் சிந்தனை மன்றம்** பல சமுதாயப் பணிகளையாற்றி வருகின்றது.